வன்கொடுமைகள் யாவும் நற்செய்தி அறிவிப்பாகவே இருந்தன என்று சொல்ல வேண்டும்.

## மறைச்சாட்சிய வீரச்சாவும் நல்லடக்கமும்:

இப்படி அங்கும் இங்கும் இழுத்துச் செல்லப்பட்டபின் இறுதியாக ஆரல் எல்லையில் இருந்த சிறையில் அடைக்கப்பட்டார் தேவசகாயம். சிறையில் இருந்த காலத்தில் தவத்திலும் இறை வேண்டலிலும் ஈடுபட்டார். வெள்ளிக்கிழமை தோறும் ஆண்டவரின் பாடுகளை முன்னிட்டும், சனிக்கிழமை தோறும் வியாகுல அன்னைக்கு வணக்கமாகவும் உண்ணா நோன்பிருந்தார். இறுதியில் 1752ஆம் ஆண்டு சனவரி 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை இரவு காற்றாடி மலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். வீரர்கள் தங்களுக்கு இடப்பட்ட ஆணைப்படி துப்பாக்கியால் 5 முறை அவரைச் சுட்டு வீழ்த்தினர். “இயேசுவே இரட்சியும்” என்னும் செபத்துடன் இன்னுயிரை நீத்து வீரச்சாவு எய்தினார் மறைசாட்சி தேவசகாயம். அவரது உடல் வன விலங்குகளுக்கு இரையாகப் போடப்பட்டது. சில நாட்களுக்குப்பின் கிறிஸ்தவர்கள் மறைசாட்சியின் உடலின் எஞ்சிய பாகங்களைச் சேர்த்து கோட்டாறு சவேரியார் கோவிலுக்குக் கொண்டு சென்றனர். அங்குப் பலிபீடத்தின்முன் அடக்கம் செய்தனர்.

அன்றுமுதல் இன்றுவரை இந்த மாமனிதரின் வாழ்வும் வீரச் சாவும் நீங்கா நினைவாக இருந்து இன்றும் நமக்கு ஆற்றலாகவும், நல்ல கிறிஸ்தவ வாழ்வுக்கும் புதிய சமுதாயப் படைத்தலுக்கும் தூண்டுதலாகவும் இருக்கின்றன.

## முத்திப்பேறுநிலை அறிவிப்பும் புனிதர்நிலை அறிவிப்புக்கான முன்னெடுப்புகளும்:

எல்லா மக்களாலும் மறைசாட்சியாகவும், புனிதராகவும் போற்றப்படுபவர் தேவசகாயம். மக்களின் மனங்களில் மட்டுமல்லாமல் வரலாற்று நாடகங்களிலும், கவிதைகளிலும், மக்கள் கலைகளிலும் 250 ஆண்டுகளாகத் துலங்குகிறது அவர் நினைவு. நமது வேண்டுகோளுக்கு இணங்கியும், நாம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளின் பலனாகவும், இறைவேண்டுதலின் விளைவாகவும் 02.12.2012-இல் நமது மறைசாட்சி முத்திப்பேறு (அருளாளர்) நிலை அறிவிப்பு நடந்தேறியது நாம் என்றும் மறக்க முடியாத கோலாகலம். அவரது புனிதர் நிலை அறிவிப்புக்கான நமது பணிகளும் நமது தரப்பில் முடிவடைந்து உரோமையில் புனிதர்களின் பேராயத்தில் ஆய்வில் இருக்கின்றது.